**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**
**அ.வ.எண். 270 /2024**

நாள் : 04.02.2026.
வா.சா.1 – ஆண்டிச்சாமி
**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

3. 1ம் பிரதிவாதி ரவிச்சந்திரன் மற்றும் 2ம் பிரதிவாதி விஜயேந்திரன் ஆகியோரின் தகப்பனாரின் பெயர் பெரியபாண்டி மற்றும் பட்டத்துப்பாண்டி என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் தகப்பனாரின் பெயரை வழக்கில் தவறுதலாக பட்டமுத்துபாண்டி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் செட்டில்மெண்ட் ஆவணங்களில் 1ம் பிரதிவாதி ரவிச்சந்திரன் மற்றும் 2ம் பிரதிவாதி விஜயேந்திரன் ஆகியோரின் தகப்பனாரின் பெயர் பட்டமுத்துபாண்டி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வழக்கிற்காக தவறுதலாக அவ்வாறு உள்ளதாக குறிப்பிடுகிறேன் என்றும் செட்டில்மெண்ட் பத்திரத்தில் என் தாத்தா பட்டமுத்துநாயக்கர் பெயர் தான் இடம் பெற்றுள்ளது என்று சொன்னால் சரியல்ல. UDR பட்டாவிலும் பட்டமுத்துபாண்டி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி கூறுகிறார்.

4. என் அப்பாவுடன் பிறந்த நடராஜன் நாயக்கர் ரெகுநாதமடை கிராமத்தில் புல எண் 160/1ஏ வில் அமைந்துள்ள இடத்தை விற்பனை செய்து விட்டார் என்று சொன்னால் சரிதான். நடராஜன் நாயக்கர் விற்பனை செய்த ஆவணத்தில் அந்த சொத்து அவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்த சின்னபாண்டி ரெகுநாதமடை கிராமத்தில் புல எண் 160/1பி மற்றும் 160/3பி–ல் அமைந்துள்ள இடத்தை விற்பனை செய்து விட்டார் என்று சொன்னால் சரிதான். சின்னபாண்டி விற்பனை செய்த ஆவணத்தில் அந்த சொத்து அவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. 2013ம் வருடம் என் சித்தப்பா நடராஜன்நாயக்கர் அவருடைய மகன் சேதுபுரத்தில் உள்ள 13 சொத்துகளை அவருடைய மகன் முத்துராஜுக்கு அவர் பாகத்திற்கு கிடைத்த சொத்துக்களை தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதக்கொடுத்துள்ளார் என்றால் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார், அந்த பத்திரம் தவறானது என்று சாட்சி கூறுகிறார். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் நடராஜன்நாயக்கர் அவர்கள் பூர்வீக சொத்தில் தன் பாகத்திற்கு கிடைக்கப்பெற்று தன் சுவாதீனத்தில் இருந்து வரும் சொத்து என்று தானசெட்டில்மெண்ட் சொத்தை

குறிப்பிட்டுள்ளார் என்று சொல்வது தவறு. பாகபிரிவினை ஏற்படவில்லை என்றும், கூட்டு குடும்ப சொத்து என்றும் சாட்சி கூறுகிறார். என் அப்பாவுடன் பிறந்த மற்றொரு சகோதரரான செல்லமுத்து பூர்வீக சொத்தில் தன் பாகத்திற்கு கிடைக்கப்பெற்று தன் சுவாதீனத்தில் இருந்து வந்த சொத்தை விற்பனை செய்துள்ளார் என்று சொல்வது தவறு. செல்லமுத்து எந்த சொத்தையும் விற்கவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

6. தாவா 18 முதல் 23 இலக்க சொத்துக்களை 9ம் பிரதிவாதிக்கு அவர் தகப்பனார் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யக்கோரி எவ்வித பரிகாரமும் இவ்வழக்கில் நான் கோரவில்லை. மற்ற செட்டில்மெண்ட் பத்திரங்களை ரத்து செய்ய கோரிவிட்டு 9ம் பிரதிவாதிக்கு அவருடைய தகப்பனார் தாவா 18 முதல் 23 இலக்க சொத்துக்களை செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் மட்டும் எழுதிக்கொடுத்ததை ரத்து செய்ய பரிகாரம் கேட்காததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும்.

7. தாவா 24 முதல் 29 இலக்க சொத்துக்களை 10 ம் பிரதிவாதி செல்லமுத்து 1995ம் ஆண்டு மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்து விட்டு அதே சொத்துக்களை அதே நபர்களிடமிருந்து மீண்டும் 2005ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் மூன்றாம் நபர்களுக்கு 10ம் பிரதிவாதி விற்பனை செய்த விவரம் மட்டும் தான் உண்மை என்றும், மீண்டும் 2005ம் ஆண்டு 10ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்பதை சாட்சி மறுக்கிறார். பட்டமுத்துநாயக்கரின் மகன்களிடையே 1975ம் ஆண்டே வாய்மொழியாக பாகபிரிவினை ஏற்படுத்தப்பட்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் ஆண்டு அனுபவித்து விக்கிரையம் செய்துள்ளார்கள் என்று சொல்வது தவறு. அதனால் தான் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் 15 வரையான ஆவணங்களில் யார் யாருக்கு ஒதுக்கப்பட்ட பாகங்களின் அடிப்படையில் தனித்தனியாக பட்டா தனிநபர்களின் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

8. தாவா 1 முதல் 11 இலக்க சொத்துகள் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்துகள் என்று சொல்வது தவறு. அவை கூட்டுக்குடும்ப சொத்து என்று சாட்சி கூறுகிறார். தாவா 1 முதல் 11 இலக்க சொத்துகளில் 3 முதல் 5

பிரதிவாதிகளுக்குண்டான பாகத்தை அவர்கள் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் மூலமாக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று நான் வாதம் செய்வதாக சாட்சி கூறுகிறார்.

9. பாலம்மாள் என் தகப்பனாருடன் பிறந்த சகோதரி ஆவார். சீனிவாசன் என் அத்தை பாலம்மாளின் மகன் ஆவார். என் அப்பா உட்பட அவருடைய சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து தங்களுடன் பிறந்த பாலம்மாளுக்கும் அவருடைய மகனான சீனிவாசனுக்கும் உதவும் பொருட்டு ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று சொல்வது தவறு. வா.சா.ஆ.18 மூலம் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் தகப்பனரான பட்டத்துப்பாண்டி அவர்கள் மட்டும் தான் பாலம்மாள் மற்றும அவர் மகன் சீனிவாசனுக்கும் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.18ல் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் பட்டத்துப்பாண்டி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.18 யை பற்றி என் தகப்பனார் மூலம் எனக்கு 2011ம் ஆண்டு தெரியவந்தது.

10. நான் 10ம் பிரதிவாதி செல்லமுத்து மற்றும் 9ம் பிரதிவாதி முத்துராஜுடன் நேசமாக உள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரத்தை நான் உரிய காலகட்டத்திற்குள் கேட்காததால் அந்த பரிகாரம் காலவரையறை தோஷத்தின் கீழ் பாதிப்படைகிறது என்று சொன்னால் நீதிமன்றம் தான் அதனை முடிவு செய்ய வேண்டும் என்று சாட்சி கூறுகிறார். பட்டமுத்துநாயக்கர் வாரிசுதாரர்களிடையே 1975ம் ஆண்டு வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டு பாகஸ்தர்கள் அனைவரும் தனித்தனியாக அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் பகுதி சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தும், இதர சொத்துக்களில் தனித்து சுவாதீனத்தில் உள்ளார்கள் என்று சொல்வது தவறு.

11. 3 முதல் 5 ம் பிரதிவாதிகள் அவர்களுக்குண்டான பாகத்தை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளதால் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு அதிக இடம் கிடைத்துள்ள காரணத்தினால் அந்த பகைமையின் காரணமாக உள்நோக்கத்தோடு இந்த வழக்னை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று

சொல்வது தவறு. மற்ற பாகஸ்தர்கள் விற்பனை செய்த பத்திரங்களை ரத்து செய்யக்கோரி எவ்வித பரிகாரமும் கேட்காமல் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் விற்பனை செய்த பத்திரத்தை மட்டும் நான் கேள்விக்குள்ளாகுகிறேன் என்று சொல்வது தவறு.

12. தாவா 1 முதல் 11 இலக்க சொத்துகள் 1 மற்றும் 2வது பிரதிவாதிகளின் பாகத்திற்கு கிடைக்கப்பெற்ற சொத்துகள் என்பதாலும், 35வது இலக்க சொத்து 1 மற்றும் 2வது பிரதிவாதிகளின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் அந்த சொத்துக்களைப் பொறுத்து பாகம் கேட்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 10ம் பிரதிவாதி செல்லமுத்து அவருக்குண்டான சொத்துகளை கூட்டுறவு சங்கத்தில் அடமானம் வைத்துள்ளார் என்றால் பட்டா அவர் பெயரில் உள்ளது. அடமானத்தில் உள்ளதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்று சாட்சி கூறுகிறார். ஏற்கனவே தாவா சொத்துக்கள் பாகபிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றும் வாய்மொழி பாகபிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தில் அவரவர்கள் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

13. ரெகுநாதமடை கிராமத்தில் உள்ள சொத்தான பி.வா.சா.ஆ.1 மூலம் விற்பனை செய்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பகுதி பாகப்பிரிவினை தோஷத்தின் கீழ் பாதிப்புக்குள்ளாகிறது என்று சொல்வது தவறு. கிரையம் பெற்ற நபர்களை வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காததன் காரணமாக நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துகள் பாகஸ்தர்களின் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது என்றும், கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்பதால் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் குறைவு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 முதல் 35 ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துகளில் எனக்கு எவ்வித பாகமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொல்வது தவறு.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.02.04 17:29:15 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.